கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 466/2022**

திரு.ராமசாமி (P.W./D.W –1) **1.9.2025.**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவாவில் நான்கு பட்டியலிட்ட சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ள விபரங்கள் தெரியும் என்றால் சரி. முதல் பட்டியலிட்ட சொத்து என்னுடைய அப்பாவிற்கு பாகப்பத்திரத்தின் படி பாத்தியப்பட்டது என்றால் சரிதான். இரண்டாவது பட்டியலிட்ட சொத்து என்னுடைய அப்பா பாகப்பிரிவினை செய்து கொண்ட பத்திரத்தின் படி என்னுடைய தாத்தா சின்ன மலையப்பனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரி. அது பொறுத்து உட்பிரிவே ஏற்பட்டு விட்டது மூன்றாவது பட்டியலிட்ட சொத்து என்னுடைய தாத்தாவிற்கு கிரைய படி பாத்தியம் என்றால் சரி. நான்காவது பட்டியல்ட சொத்து நான் கிரையமாகப் பெற்றுள்ளேன் என்றால் சரி.

2. பி.வா.சா.ஆ–1 ஆவணம் ஏற்பட்டபோது சொத்துக்கள் எப்படி பாத்தியப்பட்டது என்பதற்கு உரிய மூல ஆவண விபரங்கள் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ–2 ஆவணம் படி என்னுடைய தாத்தா ஒரு சொத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரி. பி.வா.சா.ஆ–1 ன்படி பாகம் ஏற்பட்ட சொத்துக்கள் கூட்டுக் குடும்ப பிதுராஜ்ஜிய சொத்துக்கள் என்றால் தவறு. கூட்டு குடும்பமே இல்லை. பி.வா.சா.ஆ–1 ன் படி சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் எப்படி பார்த்திம் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. 1975 ஆம் ஆண்டு வாதி, 2ம் பிரதிவாதி பிறந்துவிட்டார்கள் என்றால் சரி.

3. தாவா சொத்துக்கள் பிதுராஜ்ஜிய சொத்துக்கள் என்பதால் வாதிக்கும் இரண்டாம் பிரதிவாதிக்கும் வாரிசு உரிமை படி தாவா சொத்துக்களில் பாக உரிமை உண்டு என்றால் தவறு. இரண்டாவது பட்டியலிட்ட சொத்து எனக்கு

என்னுடைய அப்பா தான செட்டில்மெண்ட் ஏற்படுத்தி உள்ளார் என்றால் சரி. எவ்வளவு சொத்துக்கள் என்றால் 1.93 ஏக்கர். அந்த சொத்துக்கள் பிதுராஜ்ஜிய வகையில் இருந்து என்னுடைய அப்பாவிற்கு பாகமாக வந்துள்ளது என்றால் பாகமாக வந்துள்ளது. பி.வா.சா.ஆ–1 ன் படி என்னுடைய அப்பா கையொப்பம் செய்து பாகம் பிரித்துக் கொண்டு உள்ளார் என்றால் சரி. என்னுடைய சித்தப்பாவும் கையொப்பம் செய்துள்ளார்.

4. அந்த ஆவணத்தில் என்னுடைய அப்பாவும் கையொப்பம் செய்து உள்ளார் என்றால் சரி. பி.வா.சா.ஆ–1 ஆவணத்தில் படித்துபார்த்தேனா என்றால் எனக்கு படிக்க தெரியாது ஆவணங்களை வழக்கறிஞறிடம் கொடுத்துள்ளேன். பி.வா.சா.ஆ–1 ஆவணத்தில் யார் கையொப்பம் செய்துள்ளார்கள் என்ற விவரம் உள்ளது என்றால் எனக்கு படிக்கத் தெரியாது. என்னுடைய அப்பாவிற்கு எழுத படிக்க தெரியும் என்றால் படிப்பார் மூன்றாம் வகுப்பு வரை படித்துள்ளார். கையெழுத்து போடுவார் என்றால் சரி. பி.வா.சா.ஆ–1 ஆவணத்தில் என்னுடைய அப்பா கையொப்பம் தான் செய்திருந்தார். அதன் பிறகும் ஆவணங்களில் கையொப்பம் தான் செய்து வந்துள்ளார் என்றால் தெரியாது. ஆவணங்களில் கையொப்பம் செய்துள்ளாரா கைரேகை செய்துள்ளாரா என்பது எனக்கு தெரியாது.

5. பி.வா.சா.ஆ–4 தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் என்னுடைய அப்பா கைரேகை செய்துள்ளாரா அல்லது கையொப்பம் வைத்துள்ளாரா என்றால் எழுதி கைரேகை போட்டுயிருப்பார். பி.வா.சா.ஆ–4 ஏற்பட்டபோது என்னுடைய அப்பா நல்ல உடல் நிலையில் இருந்தார் என்றால் சரி. எப்போது என் அப்பா இறந்து போனார் என்றால் 12 வருடங்கள் ஆகிவிட்டது. தற்போது சாட்சி அவருடைய தகப்பனார் இறந்து ஏழு வருடங்கள் ஆகிவிட்டது என்றும் ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்து 12 வருடங்கள் ஆகிவிட்டது என்று கூறுகிறார்.

6. ஒரு நபர் உடல்நிலை சரியில்லாமல் இருந்து கையொப்பம் செய்ய முடியவில்லை என்றால் தான் கைரேகை பெறுவார்கள் என்றால் சரி. ஆனால் என் தகப்பனார் ஆவணம் ஏற்படுத்திய போது நல்ல நிலையில் இருந்தார்.

பி.வா.சா.ஆ−4 ஏற்பட்டபோது என்னுடைய தகப்பனாருக்கு உடல்நிலை சரியில்லை என்று என்பதை காண்பிப்பதற்கு மருத்துவச் சான்றிதழ் இணைக்கப்படவில்லை என்றால் ஆமாம். கையொப்பம் செய்ய முடியவில்லை என்பதை பொறுத்து மருத்துவச் சான்றிதழ் இணைக்கப்படவில்லை என்றால் சரி.

7. பி.வா.சா.ஆ−4 ஆவணத்தில் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் லோகநாதன் சண்முகம் கையொப்பம் செய்தார்கள். அவர்கள் எனக்கு உறவு என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ−4 மோசடியாக ஏற்பட்டுள்ளது என்றால் பொய். என்னுடைய அப்பா அந்த ஆவணத்தை ஏற்படுத்தி இருந்தால் கையெழுத்து தான் செய்திருப்பார். பொய்யாக ஏற்பட்டதால் தான் கைரேகை வைக்கப்பட்டுள்ளது என்றால் தவறு. 1975 முதல் 2013 வரை என்னுடைய தகப்பனார் எந்த ஒரு ஆவணத்திலும் கைரேகை வைக்கவில்லை அவ்வாறு கைரேகை வைத்ததற்கு ஆவணங்கள் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அப்படி எதுவும் செய்ததாக தெரியவில்லை. கையெழுத்து தான் செய்து வந்தார் என்றால் என் அப்பா எதற்குமே செல்ல மாட்டார்.

8. என்னுடைய அப்பா தான் எங்கள் குடும்பத்தின் தலைவர் என்றால் சரி. என்னுடைய வீட்டில் தான் இருந்து வந்தார் என்றால் ஆமாம். என்னுடைய அப்பா குடும்ப அட்டையை கையொப்பம் செய்து பெற்றுயிருப்பாரா என்றால் தவறு. கையொப்பம் செய்துள்ளாரா கைரேகை செய்து பெற்றுள்ளாரா என்று பார்க்க வேண்டும். தாவா சொத்துக்கள் என்னுடைய அப்பாவிற்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது இல்லை என்பதால் எனக்கும் என் சகோதரிகளுக்கும் அதில் சம பாகம் உண்டு என்றால் சரியல்ல. மோசடியான தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்தி வருவாய் ஆவணங்களை மாற்றி தாக்கல் செய்து உள்ளேன் என்றால் தவறு.

9. இரண்டாவது பட்டியலிட்ட சொத்து மூதாதையர் சொத்து என்பதால் எனக்கும் வாதிக்கும், இரண்டாம் பிரதிவாதிக்கும் சமபங்கு பாத்தியம் என்றால் சரியல்ல. வெகு நாட்களுக்கு முன்பு அந்த சொத்துக்களை பொறுத்து

ஆவணங்களை என்னுடைய பாட்டனார் ஏற்படுத்தி விட்டார். என்ன ஆவணம் செய்துள்ளார் என்றால் உயில் ஆவணம் ஏற்படுத்தி உள்ளார். உயில் ஆவணத்தின் அசல் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. பொய்யான ஆவணம் என்பதால் தான் அசலை தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. 2 வது பட்டியலிட்ட சொத்துக்களுக்கு உரிய வருவாய் ஆவணங்கள் எப்போது மாற்றம் செய்யப்பட்டது என்றால் ராமசாமி பெயரில் உள்ளது எந்த வருடம் என்று தெரியாது.

10. எதிர்வழக்குரையில் என்னுடைய தாத்தா எந்த வருடம் இறந்து போனார் என்று சொல்லி உள்ளோமா என்றால் என்னுடைய 12 வது வயதில் இறந்து போனார். எதிர்வழக்குரையில் சொல்லி உள்ளேன் என்றால் சொல்லவில்லை. என்னுடைய தாத்தா ஏற்படுத்தியும் உயில் ஆவண விவரங்களை முதல் விசாரணையிலும் எதிர்வழக்குரையிலும் சொல்லி உள்ளேன் என்றால் 50 வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட ஆவணம். அந்த ஆவணம் எந்த தேதியில் பிரகடனம் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய தாத்தா இந்த தேதியில் இறந்து போனார். அதன் மூலம் உயில் அமலுக்கு வந்துள்ளது என்ற விவரங்களை எதிர் வழக்குரையில் சொல்லி உள்ளேன் என்றால் தெரியவில்லை.

11. நான் சொன்னது போல் என்னுடைய தாத்தா உயில் எதுவும் ஏற்படுத்தவில்லை. மோசடியான ஆவணம் ஏற்படுத்தி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. பிதுராஜ்ஜிய சொத்துக்களை பொறுத்து என்னுடைய தாத்தா உயில் ஆவணமே ஏற்படுத்த முடியாது என்றால் சரி. பி.வா.ச.ஆ–6 ன்படி மூன்றாவது பட்டியலிட்ட சொத்தின் பட்டா என்னுடைய பாட்டனார் பெயரில் தான் உள்ளது என்றால் ஆமாம். எந்த ஆவணமும் என்னுடைய தாத்தா ஏற்படுத்தவில்லை என்பதால் தான் பட்டா மாற்றம் செய்யாமல் உள்ளது என்றால் தவறு. மூன்றாவது பட்டியலிட்ட சொத்து பிதுராஜ்ஜிய சொத்து என்பதால் வாதிக்கும் பாகம் உள்ளது என்றால் அந்த

சொத்து பாகம் ஏற்படவில்லை என்னுடைய சித்தப்பாவிற்கும் எனக்கும் வாதிக்கும் இரண்டாம் பிரதிவாதிக்கும் பாகம் உள்ளது.

12. தாவா சொத்துக்களை நான் தான் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரி. வேறு தொழில் எனக்கு இல்லை என்றால் தவறு வியாபாரம் பார்க்கிறேன். நான்காவது பட்டியலிட்ட சொத்து பூர்வீக சொத்தில் வருவாயிலிருந்து என்னால் என் பெயரில் கிரயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் தவறு. நான்காவது பட்டியலிட்ட சொத்தில் கிரயம் பெற்ற சமயத்தில் என்னுடைய வங்கி கணக்கில் தொகை வைப்பீடு இருந்ததா என்றால் இல்லை. நான்காவது பட்டியலிட்டு சொத்து என்ன விலைக்கு கிரையம் பெற்றேன் என்றால் பத்தாயிரம் ரூபாய் கிரையத்தொகை நான்காயிரம் செலவு செய்தேன்.

13. நான்காவது பட்டியலிட்ட சொத்து கிரையம் பெற்ற போது என்னுடைய அப்பா உயிருடன் இருந்தார் என்றால் சரி. நான்காவது பட்டியல் விட்டு சொத்து நான் என்னுடைய அப்பா கூட்டு குடும்பமாக இருந்து கூட்டு குடும்ப சொத்தாக கிரயம் செய்யப்பட்டது என்றால் தவறு. நான் தனிப்பட்ட முறையில் கடன் வாங்கி கிரயம் பெற்றேன். வியாபாரத்தின் மூலம் அந்த தொகையில் கடனை அடைத்தேன். கடன் வாங்கியதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. என் மாமாவிடம் கடன் வாங்கினேன். தாவா சொத்துக்கள் அனைத்திலும் வாதிக்கு தாவாவில் சொல்லியுள்ளவாறு பாக உரிமை உண்டு என்றால் தவறு. சொத்துக்களை பாகம் தருவதாக வாதியிடமும், இரண்டாம் பிரதிவாதியிடமும் சொல்லிவிட்டு பொய்யான ஆவணங்களை ஏற்படுத்தி உள்ளேன் என்றால் தவறு.

14. தாவாவில் என்னுடைய அப்பா மற்றும் தாத்தாவின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என்னிடம் ஆவணங்கள் உள்ளது. தாவா சொத்துக்கள் பிதுராஜ்ஜிய சொத்துக்கள் என்று தெரிந்துவிடும் என்பதால் தான் அந்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால்

சரியல்ல. தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. என்னுடைய எதிர்காலம் நிராகரிக்கப்பட வேண்டும் என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2025.09.01 19:03:28 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.